## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

**CC No.88/2017**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 6 |
| Name | : Thiru.Kanikkainathan |
| Father's Name | : Swamynathan |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2019.

**முதல் விசாரணை -**

நான் தற்பொழுது தாம்பரம் வட்டாட்சியாளர் அலுவலகத்தில் பணி புரிந்து 30.06.2015 ல் பணி ஓய்வு பெற்று விட்டேன். 2016 ல் நான் ஓய்வு பெற்ற பிறகு சிபிசிஐடி போலிசார் வழக்கு தொடர்பாக என்னை விசாரணை செய்தார்கள். 2002 ல் தாம்பரம் வருவாய் அலுவலராகப் பணி புரிந்து வந்தேன். அப்பொழுது இந்த வழக்கு தொடர்பாக 2005 ல் வட்டாட்சியர் இல்லாத காரணத்தினால் அவர் சார்பாக தாம்பரம் உரிமையியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என்னை அனுப்பி வைத்தார்கள். அந்த நீதிமன்றத்தில் வழக்கு தொடர்பான வருவாய் ஆவணங்களை நான் எடுத்து சென்று தாக்கல் செய்தேன். ஆவணங்கள் பற்றி என்னை விசாரணை செய்தார்கள். நான் நீதிமன்றத்தில் அது குறித்து சாட்சியம் அளித்து விட்டு வந்தேன். இன்று நீதிமன்றத்தில் அதசாஆ 3 ஆன பட்டாவில் உள்ள கையொப்பம் யாருடையது என்று கேட்டார்கள். நான் தெரியாது என்று கூறினேன். அதசாஆ 4 ஆன பட்டாவில் அலுவலக ஆவணங்களை ஒப்பிட்டு பார்த்து அதிலுள்ள கையொப்பம் கிராம் நிர்வாக அலுவலர் உடையது என்று சாட்சியம் அளித்தேன். அவரின் பெயர் எனக்கு நினைவில் இல்லை. சிபிசிஐடி என்னிடம் செய்த விசாரணையில் பொதுவாக பட்டா எப்படி பெறுவது என்பதற்கு நீதிமன்ற வில்லை 2 ரூபாய் செலுத்தி வட்டாட்சியரிடம் மனு அளிக்க வேண்டும் என்றும் சர்வேயரை நியமித்து பரிசீலிக்கப்படும்

என்றும் இதில் வருவாய் ஆய்வாளரின் பங்கு எதுவும் இல்லை என்றும் கூறினேன். அதசாஆ 3 மற்றும் 4 ஆன பட்டாவானது சிட்லபாக்கம் என்னும் ஊரைச் சேர்ந்தது ஆகும். அச்சமயத்தில் பணி புரிந்தவர்களின் பெயர் எனக்கு நினைவில் இல்லை.

**குறுக்கு விசாரணை -** இல்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

ஒம்/–xxxxxxxxxxx
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**செங்கல்பட்டு.**